# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

**முறையீட்டு மனு எண், 674/2016/பே**
**ஆணை எண். 232 /2017 நாள் 14 . 09 . 2017**

**திரு ஏ.சகாய அருள்ரெயான்ஸ்,**
**த/பெ அகஸ்டின் சிததரஞ்சன்தாஸ்,**
**6/59 கே. கிருஸ்து நகர்,**
**ஆஸ்பத்திரி ரோடு,**
**கன்னியாகுமரி.** – முறையீட்டு மனுதாரர்

**முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,**
**கன்னியாகுமரி பேரூராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம்.** – எதிர் மனுதாரர்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கே.கிருஸ்து நகரைச் சேர்ந்த திரு ஏ. சகாய அருள்ரெயான்ஸ், த/பெ திரு அகஸ்டின் சித்தரஞ்சன்தாஸ், என்பவர் தனது 10.03.2015 ம் தேதிய மனுவில் கன்னியாகுமரி பேரூராட்சி முன்னாள் தலைவர், மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் மீது புகார் தெரிவித்து விசாரணை கோரி, ஊழல் கண்காணிப்புத்துறைக்கு சமர்ப்பித்துள்ளார். இம்மனு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 5617/2015/இ2/நாள் 22.06.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 11.07.2016 ம் தேதி பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 674/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவின் மீது அறிக்கை பெறப்பட்டும் ஆய்வு மேற்கொண்டும் கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி பேரூராட்சியில் இயங்கும், (1) காமராஜர் மணிமண்டபம் எதிரில் அமைந்துள்ள கழிப்பறை, (2) நகரிய தங்கும் விடுதி, (3) நகரிய தங்கும் விடுதி அருகில் உள்ள சிற்றுண்டி கடை ஆகியவைகளை கன்னியாகுமரியை சேர்ந்த திரு சங்கரராமன் என்பவர், கடந்த 15 ஆண்டுகளாக குத்தகைக்கு எடுத்து நடத்தி வருவதாகவும், மேற்படி

நபர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை பணத்தினை சரிவர செலுத்தாத நிலையில் வரும் 31.03.2015 அன்று இவரின் குத்தகை காலம் முடிவடைவதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி இடங்களுக்கு அரசு நிர்ணயித்த தொகையினை விட 20 முதல் 50 சதவிதம் அதிக தொகைக்கு தான் ஏலம் எடுக்க தயாராக இருந்ததை கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 05.03.2015 அன்று பதிவுத் தபால் மூலம் தெரிவித்ததாகவும், தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால், முறையீட்டு மனுதாரரின் விண்ணப்பத்தினை மீறி 09.03.2015 அன்றைய கன்னியாகுமரி பேரூராட்சி மன்ற கூட்டத்தில் மேற்படி மூன்று இடங்களும் திரு சங்கரராமனுக்கே, தான் கேட்ட ஏலத் தொகையினைவிட குறைவான தொகைக்கு கொடுப்பதற்கு பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அதிகாரிகளின் துணையுடன் அதிக அளவில் கையூட்டு பெற்றுக் கொண்டு செயல்பட்டதாகவும், இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ 10/-க்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டு படிவம் 1 ஐ பூர்த்தி செய்து சமர்ப்பித்திடுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 674/2016/பே/19.07.2016 ன் மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய முறையில் நாளது தேதி வரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் முறையீட்டு மனுதாரின் மனு சம்பந்தமாக நேரடி வாக்குமூலத்தினை பதிவு செய்யும் வகையில் இம்முறைமன்ற நடுவத்தில் 05.01.2017 பிற்பகல் 3.00 மணிக்கு நேரில் ஆஜராகுமாறு தெரிவித்து இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 674/2016/பே/நாள் 02.12.2016 ன் மூலம் ஆணையிடப்பட்டது. முறையீட்டு மனுதாரர் அவ்வாறு ஆஜராகி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்யவில்லை. மேலும், முறையீட்டு மனுதாரர் வர இயலாமைக்கான எந்த ஒரு காரணத்தினையும் இம்முறையீட்டு மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இதனிடையே முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவிற்கான விளக்கத்தினை அனுப்பக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், கன்னியாகுமரி பேரூராட்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ எண் 674/2016/பே/நாள் 03.12.2016, 06.1.2017 மற்றும் 10.07.2017ல் அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டது.

கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண் 8/2017/அ1/நாள் 19.07.2017ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகாருக்கான விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சி பகுதிகளுக்குட்பட்ட காமராஜர் மணி மண்டபம் எதிரில் உள்ள கழிப்பறை, நகரிய தங்கும் விடுதி, மற்றும் அதன் அருகில் உள்ள சிற்றுண்டிக் கடை முதலியவற்றினை திரு சங்கரராமன் என்பவர் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து 01.04.2015 முதல் 31.03.2018 முடிய உள்ள காலத்திற்கு குத்தகையினை நீட்டித்து கேட்டு மேற்படி திரு சங்கரராமன் விண்ணப்பம் அளித்துள்ளதை தொடர்ந்து, கன்னியாகுமரி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 638/நாள் 09.03.2015 ன்படி திரு சங்கரராமன் என்பவருக்கு நிலுவையாக உள்ள குத்தகை தொகையினை நிலுவையில்லாமல் செலுத்திய பின்பு மேற்படி இனங்களை 15 சதவீதம் தொகை உயர்த்தி குத்தகையினை புதுப்பித்து வழங்கலாம் என மன்ற தீர்மானம் நிறைவேற்றியதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்பும் திரு சங்கரராமன் என்பவர் நிலுவைத் தொகையினை செலுத்தாமல் இருந்ததால் 31.03.02015 க்கு பிறகு அவருக்கு குத்தகை கால நீட்டிப்பு செய்து வழங்கப்படவில்லை என தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர், கன்னியாகுமரி தெரிவித்துள்ளா. எனவே இதனை தொடர்ந்து மேற்படி இடங்கள் 06.04.2015 அன்று பேரூராட்சி மூலம், வட்டாட்சியர், முன்னிலையில் சீல் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். திரு சங்கரராமன் என்பவர் குத்தகை தொகை நிலுவை வைத்திருந்ததால் தொடர்ந்து அவருக்கு குத்தகை நீட்டிப்பு செய்யாமல் பேரூராட்சி நடவடிக்கை நக.எண். 106/2016/அ2/நாள் 01.02.2016 வாயிலாக தினத்தந்தி தினசரி நாளிதழில் பொது ஏல அறிவிப்பு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் அவர்களின் வழிமுறையாக செய்யப்பட்டு 16.02.2016 அன்று பொது ஏலம் விடப்பட்டதாகவும் மேற்படி ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் ஏலம் எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

| வ. எண். | இனங்கள் | ஏலதாரரின் பெயர் | 2014-15 ம் வருட ஏலத் தொகை ரூ | 2016-17ம் வருட ஏலத் தொகை ரூ | ஏலத்தின் முலம் சென்றஆண் டைக்காட்டி லும்கூடுதல் வரவு ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | நகரிய தங்கும் விடுதி | திரு. எஸ்.அருள்ராஜன் | 4,04,797/- | 17,25,009/- | 13,20,212/- |
| 2 | உணவகம் | திரு லிவிங்ஸ்டன் ஜேக்கப் | 10,476/- | 3,50,000/- | 3,39,524/- |
| 3 | கடற்கரை சாலை கட்டண கழிப்பறை | திரு பெருமாள் | 3,23,883/- | 13,76,551/- | 10,52,668/- |

மேற்படி ஏல நடவடிக்கைகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் தீர்மானத்தின்படி உரிய வழிமுறைகளை பின்பற்றி அரசு விதிமுறைகளின்படி ஏலம் விடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே இதில் எவ்வித விதிமீறல்களும் நடைபெறவில்லை எனவும், மனுதாரர் தெரிவித்துள்ளவாறு எவ்வித கையூட்டும் பெறப்படவில்லை எனவும் முறையாக ஏலம் நடத்தப்பட்டது எனவும், விதி மீறல்கள் எதுவும் இல்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் குத்தகை தேவையெனில் ஏல நடவடிக்கைகளில் கலந்து கொண்டு ஏலத்தின் வாயிலாக அனுபவ பாத்தியதை பெற்றிருக்கலாம் எனவும் தெரிவித்து, புகார் மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யக் கோரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கக் கடிதத்தின் நகல் முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ எண் 674/2016/பே/நாள் 02.08.2017 ன் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு இவ்விளக்கத்தின்பால் முறையீட்டு மனுதாரருக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் அது குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு இரண்டுவார காலத்திற்குள் தெரிவிக்க கோரி அறிவிப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் மேற்படிமுறையீட்டு மனுதாரர் மேற்படி விளக்க அறிக்கைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இதுவரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

முறையீட்டு மனுதாரருக்கு போதிய கூடுதல் வாய்ப்புகள் அளித்தும், விதிகளின்படி உரிய படிவத்தில் நீதிமன்ற கட்டணவில்லையுடன் மனுவினை சமர்ப்பிக்கத் தவறியதோடு, இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகளின்பேரில் நேரில் ஆஜராகி தனது தரப்பிலான வாக்குமூலத்தினை தாக்கல் செய்யவும் தவறியுள்ளார். மேலும் செயல் அலுவலரது விளக்க அறிக்கையின் மீதான தனது தரப்பிலான ஆட்சேபணை எதனையும் மனுதாரர் பதிவு செய்து அனுப்பவில்லை . எனவே அவருக்கு கூறிக் கொள்ள ஏதுமில்லை எனக் கருதி முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

இருப்பினும் செயல் அலுவலரது அறிக்கையில் குறிப்பிட்ட 31.03.2015 வரையிலான குத்தகை நிலுவைத் தொகையினை சம்பந்தப்பட்ட குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டதை உறுதி செய்து அதற்கான விவர அறிக்கையினை நான்கு வாரங்களுக்குள் தனியே இம்முறைமன்ற நடுவத்திற்கும், பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் சமர்ப்பித்திட வேண்டுமென வலியுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி-அனுப்பப்படுகிறது//-

செயலாளர்

பெறுநர்

1.திரு ஏ.சகாய அருள்ரெயான்ஸ்,
த/பெ அகஸ்டின் சிததரஞ்சன்தாஸ்,
6/59 கே. கிருஸ்து நகர்,
ஆஸ்பத்திரி ரோடு,
கன்னியாகுமரி.

2.செயல் அலுவலர்,
கன்னியாகுமரி பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை – 600 001